பெண்களின் பாதுகாப்புக்காக 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்கள் : ஸ்டாலின் கொடி அசைத்து துவக்கினார்

சென்னை உள்ளிட்ட 8 நகரங்களில் அறிமுகம்

சென்னை, நவ. 11– முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இன்று தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக, மாநகரங்களின் பயன்பாட்டிற்காக 12 கோடி ரூபாய் செலவில் 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்கள், தாம்பரம், ஆவடி, சேலம், கோயம்புத்தூர், திருப்பூர், திருச்சி, திருநெல்வேலி, மதுரை மாநகரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் ரோந்து பணி மேற்கொண்டு பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் ஈடுபடுத்தப்படும்.

2025–2026–ம் ஆண்டு காவல்துறை மானியக் கோரிக்கையில், பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக மாநகரங்களின் பயன்பாட்டிற்காக 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, மாநகரங்களின் பயன்பாட்டிற்காக 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்கள் 12 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு, அவ்வாகனங்களின் பயன்பாட்டினை முதலமைச்சர் இன்றையதினம் கொடியசைத்து தொடங்கி வைத்தார் என்பது நினைவிருக்கலாம். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குனர் க.வெங்கடராமன், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரியலூர் அருகே இன்று காலை சிலிண்டர் லாரி கவிழ்ந்தது: பலத்த சத்தத்துடன் சிலிண்டர்கள் வெடித்ததால் பரபரப்பு

அரியலூர், நவ. 11– அரியலூர் மாவட்டம் வாரணவாசியில் சிலிண்டர்கள் ஏற்றி வந்த லாரி விபத்தில் சிக்கியதில், பலத்த சத்தத்துடன் சிலிண்டர்கள் வெடித்துச் சிதறியதால் பரபரப்பு ஏற்பட்டது.

திருச்சி மாவட்டம், இனாம்குளத்தூர் அருகேயுள்ள இன்டேன்ஸ் சிலிண்டர் கிடங்கில் இருந்து, நிரப்பட்ட 100 க்கும் மேற்பட்ட சிலிண்டர்களை ஏற்றிக் கொண்டு, அரியலூரிலுள்ள ஒரு தனியார் கேஸ் நிறுவனத்துக்கு லாரி ஒன்று செவ்வாய்க்கிழமை காலை வந்து கொண்டிருந்தது. இந்த லாரியை இனாம்குளத்தூரைச் சேர்ந்த கனகராஜ்(வயது35) என்பவர் ஓட்டி வந்தார்.

இன்று காலை இந்த லாரி அரியலூர் மாவட்டம் வாரணவாசி கிராமம் அருகில் உள்ள பிள்ளையார் கோவில் வளைவில் திரும்பும்போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சாலை அருகில் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்து உள்ளது. இதனால் ஏற்பட்ட அழுத்தத்தில் லாரியில் இருந்த சிலிண்டர்கள் வெடித்து சிதற ஆரம்பித்துள்ளது.

டிரைவருக்கு பலத்த காயம்

பலத்த காயங்களுடன் லாரி ஓட்டுநர் திருச்சி மாவட்டம் இனாம்குளத்தூர் பகுதியைச் சேர்ந்த கனகராஜ் குதித்து தப்பித்துள்ளார். உடனடியாக அவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

லாரியில் இருந்த மற்ற சிலிண்டர்களும் ஒவ்வொன்றாக வெடித்து தீ பற்றியதால் லாரி முற்றிலும் எரிந்து சேதம் ஆனது. பல கிலோமீட்டர் தொலைவுக்கு அப்பாலும் சிலிண்டர்கள் வெடிக்கும் சப்தம் கேட்ட நிலையில், அந்தப் பகுதி முழுவதுமே கரும்புகை சூழ்ந்து காணப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த நிலைய அலுவலர் செந்தில்குமார் தலைமையிலான தீயணைப்புத் துறையினர், தண்ணீரைப் பீச்சி அடித்து தீயைக் கட்டுக்குள் கொண்டு வர முயன்றனர். இருப்பினும் அதற்குள் லாரி முழுவதுமாக தீப்பற்றி எரிந்து சாம்பலானது.

சம்பவ இடத்துக்கு வந்த மாவட்ட ஆட்சியர் பொ.ரத்தினசாமி மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஷ்வேஷ் பா.சாஸ்திரி தலைமையிலான காவல் துறையினர், திருச்சி அரியலூர் சாலையில் வாகனங்கள், மக்கள் செல்ல தடைவிதித்து, சுமார் ஒரு கிலோமீட்டர் சுற்றளவுக்கு நான்கு புறமும் தடுப்பு அரண்களை அமைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். விபத்து நடந்த பகுதியில் இருந்து முக்கால் கிலோ மீட்டர் தூரத்துக்கு வீடுகள் இல்லாததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இந்த சம்பவம் காரணமாக திருச்சி, தஞ்சாவூரில் இருந்து அரியலூர் செல்லும் வாகனங்கள் அனைத்தும் வி.கைகாட்டி வழியாக திருப்பி விடப்பட்டன. இந்த விபத்து குறித்து கீழப்பழுவூர் காவல் துறையினர் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

வாரணவாசி பிள்ளையார் கோயில் அருகேயுள்ள ஆபத்தான சாலையோர வளைவில், அவ்வப்போது வாகனங்கள் கவிழ்ந்து விபத்துக்குள்ளாவது வாடிக்கையாக நிகழ்ந்து வருகிறது. இந்த வளைவை அகலப்படுத்தி விபத்தை தடுக்குமாறு அப்பகுதி மக்கள் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்தும் இதுவரை நடவடிக்கை இல்லை என்று கூறப்படுகிறது.

லாரியில் சிலிண்டர் வெடித்து சிதறும் வீடியோ வெளியாகி பரபரப்பை கிளப்பி உள்ளது.

எஸ்ஐஆர்–ஐ கண்டித்து தமிழகம் முழுவதும் தி.மு.க. கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம்

சென்னை, நவ. 11– தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை (எஸ்ஐஆர்) கண்டித்து தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் இன்று தி.மு.க. கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வாக்குரிமை பறிப்பு, தேர்தல் ஆணையம், மத்திய பா.ஜ.க. அரசை கண்டித்து கோஷம் எழுப்பி தி.மு.க. கூட்டணி கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தி.மு.க.வின் மக்கள் பிரதிநிதிகளும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கோஷமிட்டனர்.

சென்னை மிண்ட் பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் சண்முகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சேப்பாக்கம் சிவானந்தா சாலையில் தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையில் தி.மு.க. கூட்டணியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் கம்யூனிஸ்ட் முன்னாள் மாநில செயலாளர் முத்தரசன் பங்கேற்றார். வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்திற்கு எதிராக தூத்துக்குடியில் கனிமொழி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகே காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையிலும், திருவள்ளூரில் தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த நிலையில் ஆர்ப்பாட்டம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:–

எஸ்ஐஆர்–ஐ தடுப்பதே நம்முன் இப்போதுள்ள ஆகப்பெரும் கடமை! என்ற தலைப்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ஒருபுறம், மக்களாட்சியின் அடிப்படையான வாக்குரிமையையே பறிக்கும் எஸ்ஐஆர் எனும் ஆபத்துக்கு எதிராகச் சட்டப் போராட்டம்

களப் போராட்டம்–மறுபுறம், தொடங்கப்பட்டுவிட்ட எஸ்ஐஆர் பணிகளில் குளறுபடிகளைத் தடுத்திட களப் போராட்டத்தில், இன்று தமிழ்நாடெங்கும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பதாகைகளை ஏந்தியும் கண்டன முழக்கங்களை எழுப்பியும் எஸ்ஐஆர் எனும் பேராபத்துக்கு எதிராகக் கூடியுள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர்! தொடர்ந்து செயலாற்றுவோம்! நம் மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்போம்! என்று கூறியுள்ளார்.

ரூ. 61.75 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது

சிவகாசி – ஸ்ரீவில்லிபுத்தூர் ரெயில் நிலையம் இடையேயுதிய சாலை மேம்பாலம்: ஸ்டாலின் திறந்தார்

தியாகி சங்கரலிங்கனார் பெயரைச் சூட்டினார்

சென்னை, நவ. 11– விருதுநகர் மாவட்டத்தில் 61 கோடியே 74 லட்சம் ரூபாய் செலவில் சிவகாசி மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ரெயில் நிலையங்களுக்கிடையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்து, அப்பாலத்திற்கு தியாகி சங்கரலிங்கனார் மேம்பாலம் எனப் பெயர் சூட்டினார்.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சிவகாசி நகரமானது பட்டாசு மற்றும் அச்சுத் தொழிலுக்கு மிகவும் பிரசித்தி பெற்றது. குட்டி ஜப்பான் என்றும் இந்நகரம் அழைக்கப்படுகிறது. சிவகாசி நகரிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் செல்லும் சாலையில் உள்ள சாட்சியாபுரத்தில் அமைந்திருக்கும் ரெயில்வே கேட் ஒவ்வொரு முறையும் மூடப்படும்போது, பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வந்ததோடு, பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவர்களும், அவசரமாக மருத்துவமனை செல்லும் மக்களும் நீண்டநேரம் காத்திருக்கும் சூழ்நிலை ஏற்பட்டது.

இதனைக் கருத்தில் கொண்டு, இம்மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்றும், அவர்களது சிரமத்தை போக்குவதற்காகவும், சிவகாசி மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ரெயில்வே நிலையங்களுக்கு இடையே சாட்சியாபுரத்தில் புதிய மேம்பாலம் கட்டுவதற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டார்.

5 லட்சம் பேர் பலன்

அந்த உத்தரவிற்கிணங்க, ஸ்ரீவில்லிபுத்தூர் – சிவகாசி – விருதுநகர் – அருப்புக்கோட்டை – திருச்சுழி – நரிக்குடி – பார்த்திபனூர் சாலையில் ரெயில்வே கேட் எண். 427க்கு மாற்றாக ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் சிவகாசி இரயில் நிலையங்களுக்கிடையே சாட்சியாபுரத்தில் 61 கோடியே 74 லட்சம் ரூபாய் செலவில் புதிய மேம்பாலம் கட்டப்பட்டு, அதை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த தியாகி சங்கரலிங்கனார் விடுதலைப் போராட்ட வீரரும், மதராசு மாநிலம் என்று அழைக்கப்பட்ட மாகாணத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்காக, தனது வீட்டின் முன்பு 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்தவரும் ஆவார். அன்னாரது தியாகத்தைப் போற்றும் வகையில், முதலமைச்சர் ஸ்டாலின் இன்று புதிதாகத் திறந்து வைத்த மேம்பாலத்திற்கு "தியாகி சங்கரலிங்கனார் மேம்பாலம்" எனவும் பெயர் சூட்டினார். இந்த மேம்பாலத்தினால் சிவகாசியைச் சுற்றியுள்ள சாட்சியாபுரம், ஆனையூர், தேவர்குளம், திருத்தங்கல் உள்ளிட்ட 30 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 5 லட்சம் மக்கள் பயன் அடைவார்கள். மேலும், இம்மாவட்ட மக்களின் முப்பது ஆண்டு கால கனவு முதலமைச்சரால் இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈசாப் இந்தியா லிமிடெட்

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.
தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

செப்டம்பர் 30, 2025 வரை முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

ரூ. லட்சங்களில் (EPS தவிர)

வ.எண்	விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு செப்டம்பர் 30, 2025 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த காலாண்டு ஜூன் 30, 2025 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த காலாண்டு செப்டம்பர் 30, 2024 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த ஆறு மாதங்கள் செப்டம்பர் 30, 2025 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த ஆறு மாதங்கள் செப்டம்பர் 30, 2024 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த ஆண்டு மார்ச் 31, 2025 (தணிக்கை செய்யப்பட்டது)
1	மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம்	38,389	35,290	33,991	73,679	67,073	138,125
2	இக்காலத்திற்கான நிகர லாபம் (வரிக்கு முன், சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்)	7,012	5,510	5,883	12,522	11,867	23,572
3	இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	10,103	5,510	5,883	15,613	11,867	23,572
4	இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	7,920	4,094	4,316	12,014	8,761	17,542
5	இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)]	7,915	4,090	4,316	12,005	8,761	17,524
6	சமபங்கு மூலதனம்	1,539	1,539	1,539	1,539	1,539	1,539
7	மற்ற மூலதனம்	-	-	-			34,586
8	பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்)						
	அ) அடிப்படை	51.46	26.60	28.04	78.06	56.93	113.98
	ஆ) குறைமதிப்பு	51.46	26.60	28.04	78.06	56.93	113.98

குறிப்பு : மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள செப்டம்பர் 30, 2025 -ன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் www.esabindia.com என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின் BSE Limited மற்றும் National Stock Exchange of India Limited என்ற இணையதளத்திலும் காணலாம்.

சென்னை
11 நவம்பர், 2025

"Shaping the world we imagine"
Visit our website : https://www.esabindia.com

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக
ரோஹித் கம்பீர்
மேலாண்மை இயக்குனர்

அமர்ஜோதி ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 157, குமரன் ரோடு, திருப்பூர் 641 601.
E-mail: mill@amarjothi.net | Website: www.amarjothi.net | CIN : L17111TZ1987PLC002090 | Phone: 0421 4311600

செப்டம்பர் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான நிதிநிலை முடிவுகளின் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு 30.09.2025 (தணிக்கை செய்யாதது)	முடிந்த காலாண்டு 30.06.2025 (தணிக்கை செய்யாதது)	முடிந்த காலாண்டு 30.09.2024 (தணிக்கை செய்யாதது)	முடிந்த அரையாண்டு 30.09.2025 (தணிக்கை செய்யாதது)	முடிந்த அரையாண்டு 30.09.2024 (தணிக்கை செய்யாதது)	முடிந்த ஆண்டு 31.03.2025 (தணிக்கை செய்தது)
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	4488.60	4897.36	5613.15	9385.96	11591.25	21398.85
2	காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் முன்)	329.71	319.43	383.51	649.14	787.74	1618.41
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்)	329.71	319.43	383.51	649.14	787.74	1618.41
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்)	262.77	254.58	316.51	517.34	650.12	1104.06
5	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	262.77	254.58	316.51	517.34	650.12	1,104.06
6	சமபங்கு மூலதனம்	675.00	675.00	675.00	675.00	675.00	675.00
7	கடந்த ஆண்டு தணிக்கையான இருப்புநிலை அறிக்கையில் உள்ளபடி இதர சமம்	-	-	-	-	-	18,297.18
8	பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/–) (தொடர் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்)						
	ஏ. அடிப்படை	3.89	3.77	4.69	7.66	9.63	16.36
	பி. டைலூட்டட்	3.89	3.77	4.69	7.66	9.63	16.36

செப்டம்பர் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு 30.09.2025 (தணிக்கை செய்யாதது)	முடிந்த காலாண்டு 30.06.2025 (தணிக்கை செய்யாதது)	முடிந்த காலாண்டு 30.09.2024 (தணிக்கை செய்யாதது)	முடிந்த அரையாண்டு 30.09.2025 (தணிக்கை செய்யாதது)	முடிந்த அரையாண்டு 30.09.2024 (தணிக்கை செய்யாதது)	முடிந்த ஆண்டு 31.03.2025 (தணிக்கை செய்தது)
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	4740.97	5270.08	5386.52	9411.95	13278.69	23167.55
2	காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் முன்)	334.15	325.95	393.25	660.10	805.58	1659.54
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்)	334.15	325.95	393.25	660.10	805.58	1659.54
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்)	266.31	259.77	324.55	526.08	664.85	1134.63
5	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	266.31	259.77	324.55	526.08	664.85	1,134.63
6	சமபங்கு மூலதனம்	675.00	675.00	675.00	675.00	675.00	675.00
7	கடந்த ஆண்டு தணிக்கையான இருப்புநிலை அறிக்கையில் உள்ளபடி இதர சமம்	-	-	-	-	-	18,531.61
8	பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/–) (தொடர் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்)						
	ஏ. அடிப்படை	3.95	3.85	4.81	7.79	9.85	16.81
	பி. டைலூட்டட்	3.95	3.85	4.81	7.79	9.85	16.81

குறிப்பு:

1. செப்டம்பர் 30, 2025ல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான மேற்கூறிய தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதி முடிவுகள், தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, நவம்பர் 10, 2025 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழுவின் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு, நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.
2. இந்த நிதி முடிவுகள், நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 133ன் கீழ் அறிவிக்கப்பட்ட பொருந்தக்கூடிய இந்திய கணக்கியல் தரநிலைகள் ('Ind AS') மற்றும் நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள், 2015ன்படி (திருத்தப்பட்டபடி) தயாரிக்கப்பட்டுள்ளன.
3. மேலே உள்ளவை SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள், 2015ன் விதிமுறை 33ன் கீழ் பங்குச் சந்தையில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாகும். காலாண்டு நிதி முடிவுகளின் முழு வடிவம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சு பிஎஸ்இ லிமிடெட்டின் இணையதளத்திலும் (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளமான https://tinyurl.com/Amarjothi-Financials-30092025-லும் கிடைக்கிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் இதை பார்க்கலாம்.
4. கம்பெனியின் செயல்பாடுகள் ஒரு பகுதியாக நூல் உற்பத்தியில் மட்டுமே ஈடுபடுகிறது.
5. ஒருங்கிணைந்த நிதி முடிவுகள் நிறுவனத்தின் முழு துணை நிறுவனமான ஆர்பிஜெ டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்டின் நிதிநிலை முடிவுகளையும் உள்ளடக்கி உள்ளது.
6. முந்தைய காலகட்டங்களுக்கான புள்ளிவிவரங்கள், தேவையான இடங்களில் மீண்டும் தொகுக்கப்பட்டுள்ளன/மீண்டும் கூறப்பட்டுள்ளன.

இடம்: திருப்பூர்
தேதி: 10.11.2025

அமர்ஜோதி ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
R. ஜெயசந்தர்
முழு நேர இயக்குனர்
DIN:00390836

சாக்சாப்ட் லிமிடெட்

SAKSOFT your digital transformation partner

CIN: L72200TN1999PLC054429
பதிவு மற்றும் கார்ப்பரேட் அலுவலகம்: குளோபல் இன்போசிட்டி பார்க், 2வது தளம், பிளாக்–A, எண். 40, டாக்டர் எம்.ஜி.ஆர். சாலை, கந்தன்சாவடி, பெருங்குடி, சென்னை –600 096.
Phone: +91-44-24543500 I Email:investorqueries@saksoft.co.in I website: www.saksoft.com

செப்டம்பர் 30, 2025–ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் அறிக்கையின் சுருக்கம்

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	முடிந்த காலாண்டு 30.09.2025	முடிந்த அரையாண்டு 30.09.2025	முடிந்த காலாண்டு 30.09.2024	முடிந்த அரையாண்டு 30.09.2024
	தணிக்கை யாகாதது	தணிக்கை யாகாதது	தணிக்கை யாகாதது	தணிக்கை யாகாதது
செயல்பாடுகள் மூலம் வருமானம்	25,849.30	50,756.75	21,528.95	41,629.57
காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	5,127.92	9,431.37	3,528.13	6,886.35
வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	5,127.92	9,431.37	3,528.13	6,886.35
வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	3,596.70	6,831.49	2,616.23	5,174.85
காலத்திற்கான ஒட்டுமொத்த வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர ஒட்டு மொத்த வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது	3,947.36	8,609.97	3,693.89	6,346.14
சமபங்கு மூலதனம்	1,274.83	1,274.83	1,280.17	1,280.17
பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (பங்கு ஒன்றின் முகமதிப்பு ரூ.1 (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகளுக்காக)				
(ஏ) அடிப்படை (ரூ.) (வருடாந்திரம் அல்ல)	2.8	5.34	2.06	4.08
(பி) டைலூட்டட் (ரூ.) (வருடாந்திரம் அல்ல)	2.75	5.22	2.06	4.08
குறிப்புகள்:				
1. முக்கிய தனியான நிதிநிலை தகவல்				
செயல்பாடுகள் மூலம் வருமானம்	12,808.08	25,354.76	10,652.89	20,589.70
வரிக்கு முன் லாபம்/(நஷ்டம்)	3,788.48	6,244.55	2,147.70	4,143.59
வரிக்கு பின் லாபம்/(நஷ்டம்)	2,851.52	4,734.59	1,594.39	3,101.14

2. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிமீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் நவம்பர் 10, 2025 அன்று ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்ட செப்டம்பர் 30, 2025–ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் கம்பெனியின் இணையதளம் https://www.saksoft.com/investors/financials/ மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளம் www.nseindia.com மற்றும் www.bseindia.comல் உள்ளது.
3. ஆகஸ்ட் 8, 2025 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில், இணைப்பு முறையிலான கூட்டு ஒருங்கிணைப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன் மூலம் அதன் முழுச் சொந்தமான துணை நிறுவனமான ஆக்மென்டோ லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சக்சாப்ட் லிமிடெட் (தாய் நிறுவனம்) உடன் இது தொடர்பாக தேவையான ஒப்புதல்களைப் பெறுவதற்கு உட்பட்டு இணைக்கப்பட உள்ளது. திட்டத்தின்படி நியமிக்கப்பட்ட தேதி ஏப்ரல் 1, 2026 ஆகும். முன்மொழியப்பட்ட ஒருங்கிணைப்பின் காரணமாக மேற்கண்ட நிதிநிலை முடிவுகளில் எந்த தாக்கமும் இல்லை.
4. நிறுவனம் நவம்பர் 10, 2025 அன்று நடைபெற்ற அதன் குழுக் கூட்டத்தில், முழுமையாக செலுத்தப்பட்ட ரூ.1.00 முக மதிப்புள்ள ஒரு பங்குப் பங்கிற்கு (45%) ரூ.0.45/– இடைக்கால ஈவுத்தொகையை அறிவித்துள்ளது.

இடம்: சென்னை
தேதி : நவம்பர் 10, 2025

இயக்குனர்கள் குழு சார்பாக,
ஆதித்ய கிருஷ்ணா
சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குனர்